தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௬	மலர்
	விசுவாவசு, ஆடி.	
௪௧	1965 ஜூன், ஜூலை.	௪.

அறத்தின் தீர்ப்பு!

(புலவர். தி. நா. அறிவுஒளி.)

அறத்தின் தீர்ப்பு எவரையும் விட்டுவிடுவதில்லை. புகழும் செல்வாக்கும் பொருளும் ஆற்றலும் ஆட்சி வல்லமையுங்கூட அறத்தின் ஆற்றலின் முன் அடிபணிந்து வீழ்ச்சியடைந்தே தீரவேண்டும். நிலைபேறுடைய அறம், நிலையான வாழ்வை உருவாக்கி யமைக்கிறது. ஆனால், மிகப் பொறுமையாகவும், அடக்கமாகவுமே அறம் தன் கடமையைச் செய்கிறது. அதே நேரத்தில் விழிப்போடும் கருத்தோடும் கடமையை நிறைவேற்றுகிறது!

நெஞ்சத்தின் கோணல்களுக்கும், ஒழுங்கற்ற இயல்புக்கும் உரிய உண்மை அடிப்படையை ஆராய்ந்து தெளிந்து, திருந்துவதற்கு முயல்பவர்கள் கோடிக்கணக்கான மக்களுள் ஒருசிலரே யாவர். ஆயின், மிகப்பலர் தம் தவறுகளுக்கு எந்த வகையினாலேனும் 'சப்பைக்கட்டு' ஆறுதல் தேடிக் கூறித் தாம் மிக நேரியர் என உலகிற்குப் போலியாகக் காட்டி ஏமாற்றவே முயல்கின்றனர்.

சிறு காரணங்களுக்குள் சிறைப்பட்டுக் கிடப்பதன்று அறம்! இவ்வுண்மையை உணரத் தவறும் உள்ளங்கள், பொய்மையாறுதலால் போலி மகிழ்வெய்திப் பொங்கினாலும், அறத்தின் ஆட்சியிலே அவை படவேண்டியதைப் பட்டுத்தான் தீரவேண்டும்.

இன்றியமையாத பண்பாட்டு வாழ்க்கையைத் தமிழர் அன்றே போற்றினர். அது ஆர்ப்பாட்ட ஆரவாரப் போலி வாழ்வன்று; அதனைக் கடந்த உயர்நிலை வாழ்வு. உயர்நிலை வாழ்வானது பண்

யையும் அன்பையும் அழகையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றி, அறத்தின் அணைப்பில் வளர்ந்து சிறக்கும்.

இன்று சிறிது சிறிதாய்ப் பரவிவரும் ஆர்ப்பாட்ட வாழ்வு, போலி நாகரிகத்தையும் பண்புக் கேட்டையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றி முரண்பாட்டினால் வளர்க்கப்பெற்று அழிவை விளைப்பதற்குரியதாக அமைந்தது. இவ்விரண்டிற்கும் உள்ளவேற்றுமையை மாந்தர் தெள்ளத்தெளியப் புரிந்துகொள்ள வேண்டும்.

குழப்பமான கொள்கைகளும், கருத்துக்களும், மெய்யுணர்வு விளக்கங்களும், குறிக்கோள்களும் நம்நாட்டில் மலிந்துவிட்டன. அறிஞர்கள் என்போரும் இப்பொய்மைகளைக் கிளிப்பிள்ளைகளைப்போல் ஒப்பிக்கும் இழிநிலையே இன்றுள்ளது. இதை அடியோடு மாற்ற வேண்டும். உண்மை வாழ, வளர, வழிவகை செய்யவேண்டும்.

ஒழுக்கம், சட்டம், முறை எல்லாம் செயற்கையாக உண்டாக்கப் பட்டவையே; மக்களின் கற்பனைப் படைப்புக்களே. இவை இயற்கையின் படைப்பல்லதான். ஆயின், அவை பல மக்கள் கூடிவாழும் மன்பதை வாழ்வுக்கு—கூட்டுவாழ்வுக்கு—அதனால் விளையும் சிக்கல்கள், பூசல்களுக்கு—அமைதியின்மைகளுக்குத்—தீர்வு காண்பதற்காகவும் ; ஏன் ? அக்குறைகள் விளையாமல் இருப்பதற்காகவும் உண்டாக்கப்பட்டவை. பல நன்மைக்காகத்தான் இந்தகு சில கட்டுப்பாடுகளை அறிஞர்களும் புலவர்களும் ஆக்கிச் செயல்படுத்திப் போற்றிவருகின்றனர். இவற்றைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டுமென்று மக்களுக்குக் கற்பித்தும, பயிற்றியும வற்புறுத்துகின்றனர். ஆயின் இவையும் காலப்போக்கில், வாழ்க்கையின மாறுதல்களுக்கேற்ப மாறவும், புதுமையுறவும் கூடும். ஆயின் இவற்றையெல்லாம்விட வலிமை வாய்ந்ததும், இயற்கையின் ஊழால் அமைந்ததும் அறம் தான். அறம் அழியாதது மட்டுமல்ல; அழிக்க முடியாததுமாகும். அறம் வாழ்வது மட்டுமல்ல ; வாழ்விப்பதும அதுவேயாம். எந்த அறம் உலகம் நிலைபெறக் காரணமாக இருக்கிறதோ ; அந்த அறம் உலகம் வாழவும், வளரவும் உதவும் தாயாக இருக்கிறது, அந்த அறத்தைப் புறக்கணித்தால் வீழ்ச்சி திண்ணமே.

புறச்செயல்கள் அகச்செயல்களுக்குக் கரணியமாகின்றன. அதுபோல அறச் செயல்கள் புறச் செயல்களுக்குக் கரணியமாகின்றன. எனவே, அகமும் புறமும் ஒன்றிய நிலையில் இயங்கும் வகையில் வாழ்க்கை இயல்பு இணைக்கப்படவேண்டும். இதுவே பண்டைத் தமிழரின் அரிய வாழ்வியல் இலக்கணம்.

ஆம். அதனால்தான் அகத்திணைக்குப் புறனாகப் புறத்திணையை முறைப்பட, ஒழுங்காகப் பொருத்தி அமைத்தனர். இந்நுட்பம் உணராத கல்வி—உணர்த்தாத கல்வி—என்ன கல்வி!

பண்டைத் தண்டமிழ்ச் சான்றோரின் அரிய வாழ்வாராய்ச்சியின் ஒட்பநுட்ப மெல்லாம் தேர்ந்தாய்ந்து தெளிந்து தெரிந்து உணர வேண்டியது—உணர்த்தவேண்டியது—நம்நாட் கடமையன்றோ?

புறச்செயல்களில் கயமையை ஆடவிட்டு அகச்செயல்களில் கற்பொழுக்கத்தை—அறத்தைப்—பண்பை, வாழவைக்க முடியாது. 'கண் விழித்தல்' என்ற புறச்செயல் 'கண்ணெரிச்சல்' என்ற எதிர்ச் செயலை—அகச்செயலை—உண்டாக்கியே தீரும்.

கண்ணெரிச்சல் தீரக் கண்விழித்தல் கட்டுப்படுத்தப்பெற வேண்டும். இது கண்ணுக்கு மட்டுமல்ல; உள்ளத்துக்கும் அறிவுக்கும் உடலுக்கும் பொருந்தும் இலக்கணமுமாம்.

அறவுணர்வு உள்ளத்தில் செழித்து வளர ஆவனசெய்தல் நனிமிக இன்றியமையாததாம்.

உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்தி அரியகலை யோவியமாக ஆக்கிக் கொள்ளவேண்டும். உணர்ச்சிகளுக்கு வெறிக்கள்ளை யூட்டி மயக்கிப் பித்தேற்றியலையச் செய்து தமக்கும் பிறர்க்கும் தீங்கு விளைவித்துக் கொள்ளக்கூடாது.

தீமை—துன்பம்—இவற்றைக்கண்டுதான் சில உணர்வற்ற மாந்தர் கட்டுப்பட்டு அடங்க முற்படுகின்றனர். ஆகவே, ஒறுப்புகள் (தண்டனைகள்) வேண்டியே இருக்கின்றன, அந்நிலையையும் கடந்து உயர மாந்தர் முனைய வேண்டும்.

அறம் எத்துணை ஆற்றல் சான்றதென ஆய்ந்துணர்ந்து தெளிவுபெற்று அறத்தை வழிபடும் அகமலர்ச்சியே நனிசீரியது; அந்த நிலைக்கு மக்கள் அக வளமும் அறிவு வளமும் பெற முனைய வேண்டும். நிலையில்லா ஆரவாரங்கள் காலடியில் நினைவைப் பறிகொடுத்து நிலைசான்ற நல்லறத்தைத் துறக்கும் புன்மை நிலை மாற வேண்டும். செந்தமிழறத்தை யுணர்ந்து சீர்பெறும் வாழ்வில் தலைப்படாதார் இருந்தும் ஒன்றுதான்; இல்லாதொழிந்தும் ஒன்றுதான்!

அறத்தை ஏமாற்றி வெற்றி வாழ்க்கை வாழ்கிறோம் என யாரும் எள்ளி இகழ்ந்து சிரித்து வெறிகொள்ளவே இயலாது. அறத்தைத் தோல்வியுறச் செய்தார் இதுவரை எவருமிலர். அறத்தை வீழ்த்துவார் இனியும் எவரும் ஆற்றார். ஏன்? அறத்தின் ஆட்சியின் ஆற்றல் அத்தகையது. மறம்போற்றி வென்றாரும் இலர்; அறம் போற்றித் தோற்றாரும் இலர்.

அறம, நடுநிலை பிறழாதது. அதன் தீர்ப்பு நேர்மை வழுவாதது. இன்று செம்மாப்புற்றுத் திரியும் அறக் கொலைஞர் தீர்ப்பின் வாய்ப்பட்டபோது இருக்குமிடந் தெரியாதொழிவர்! அறத்தின் தீர்ப்புக்குமுன் அனைத்தும் தலைவணங்க வேண்டியதுதான்!

வஞ்சினம் வாய்த்த வேந்தன்

(பேராசிரியர். கே. எஸ். மகாதேவன், M.A., B.Sc.)

தனியொருத்தியாகச் சூழ்நிலையை எதிர்த்து வெற்றி கொண்ட பத்தினிக் கடவுளுக்குச் சிறப்புச் செய்யப் பேரரசி வேண்மாள் விரும்பினாள். அந்த நற்பணியை நிறைவேற்றும் செயலை வானவர் தோன்றல் செங்குட்டுவன் மேற்கொண்டான்.

மறம் விளைத்த அறம்

மன்னர் ஓர் அறப்பணியைச் செய்து முடிக்கக் கையாளும் முறைக்கும் ஏனைய எளிய மக்கள் அதுபோன்றதொரு பணியைச் செய்து முடிக்க மேற்கொள்ளும முறைக்கும் வேறுபாடு இருப்பது வெளிப்படை. எளிய மக்கள் எல்லோரையும் பணிந்து, பொருளுதவி, உழைப்புதவி, சொல்லுதவி போன்றவற்றை ஏற்றுத் தாம் மேற்கொண்ட செயலைச் செயது முடிப்பர். ஆனால், மன்னரோ, தாம் முடிக்க விரும்பிய பணியைத் தம் வீரத்தையே கருவியாகக் கொண்டு செய்து முடிப்பர். தஞ்சைப் பேரூரில் தலைநிமிர்ந்து நிற்கும் பெருங்கோயிலும், கங்கை கொண்ட சோழபுரத்தில் தவினுறத் திகழும் கற்கோவிலும இத்தகைய வீரத்தை வித்தாகக் கொண்டு எழுந்த அறப்பணிகளேயாம். இவ்வுண்மையை அறியாதார் 'அறப்பணி செய்வதில் செங்குட்டுவன் மறத்தைப் பயன்படுத்திவிட்டானே' என்று பேசுகின்றனர், மன்னர்கள் குதிரை வேள்வி செய்வதற்கும், இராசசூய வேள்வி செய்வதற்கும் முதற் செயலாகப் பிற மன்னரைப் போருக்கு அழைத்துத் 'திக்குவிசயம்' செய்வதைப் புராணங்களும, இதிகாசங்களும் பேசுகின்றன. கண்ணகிக்குச் சிறப்புச் செய்ய விரும்பிய செங்குட்டுவனும் அத்தகையதொரு திசைச் செலவையே மேற்கொண்டான். இருந்தாலும் ஏனோ சிலர் 'தக்க காரணம் இல்லாமல் போருக்கெழுதல் ஆண்மையாகுமா; அது குறும்பன்றோ?' என்று குழைந்து பேசுகின்றனர்,

நூலறி புலவோர் நுட்பம்

கண்ணகிக்குச் சிறப்புச் செய்ய விரும்பிய செங்குட்டுவன் நூலறி புலவரை நோக்கினனேயன்றி வாய்திறந்து தன் கருத்தை வெளிப்படுத்தி விடவில்லை. அந்நிலையில் நூலறி புலவர்கள்

"ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்
விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்துக்
கற்கால் கொள்ளினுங் கடவு ளாகும்"

(காட்சி 117–19)

என்று மொழிந்தனர். பொதியிலை முற்கூறி. இமயத்தைப் பிற்கூறியதால் செங்குட்டுவன் பொதியிலைத் தேர்ந்தெடுப்பதையே நூலறி

புலவர் விரும்பினர் என்று சிலர் முடிவு செய்ய முன்வருகின்றனர். இங்குப் பேசுகிறவர்கள் 'நூலறி புலவோர்' என்பதை நாம் மறந்து விடலாகாது. அரசன் தன் விருப்பத்தை வெளிப்படையாகக் கூறாத நிலையில், அவர்கள் முந்திக்கொண்டு தம் விருப்பு வெறுப்புக்களை வெளிப்படையாகக் காட்டும் வகையில் சொற்களை உதிர்த்து விடுவார்களா? அப்படி உதிர்த்து விடுவார்களானால் அவர்களை நூலறி புலவர் என்று அழைப்பதுதான் பொருந்துமா? முடிவு செய்ய வேண்டியவன் அரசன்; எனவே, தங்கள் பேச்சு அவன் செய்ய விருக்கும் இறுதி முடிவை எந்த வகையிலும் தொடுவதாக இருத்தல் கூடாது எனபதில் நூலறி புலவோர் மிகவும் எச்சரிக்கையாக இருக்கின்றனர்! பொதியிலையும் இமயத்தையும சமநோக்கோடு மாமன்னன் திருமுன்னர் எடுத்துவைக்கின்றனர். எனவே தான், பொதியிலைச் சொல்லி அடுத்து இமயத்தைச் சொன்னது போல, நீர்ப்படை பற்றிப் பேசும்போது காவிரியை முதலில் சொல்லிப் பின்னர் கங்கையை அவர்கள் சொல்லவில்லை! மாறாக,

> "கங்கைப்பேர் யாற்றினுங் காவிரிப் புனலினும்
> தங்கிய நீர்ப்படை தகவோ வுடைத்து"
> (காட்சி. 120-21)

என்று, கங்கையை முற்கூறிக் காவிரியைப் பிற்கூறுகின்றனர்!

இமயமலை சேரன் மலை?

சிலர் 'விற்றலைக் கொண்ட' என்ற அடைமொழியை இமயத்துக்கு இட்டு நூலறி புலவோர் பேசுவதே, "இமயத்தில் செங்குட்டுவன் சென்று கல்லெடுப்பது அவ்ன் தன் மலையில் தானே கல்லெடுத்துக் கொள்ளும் ஒரு சிறு செயல்' என்னும் குறிப்பைத் தருவதாகப் பேசுகின்றனர். இதுவும் தவறான கருத்தே. 'விற்றலைக் கொண்ட' என்ற அடைமொழியை அடுத்து 'வியன்பேர்' என்ற அடைமொழியையும் நூலறி புலவோர் தந்திருக்கின்றனரே! இமயம் மிகப் பெரிது; சேரனது வில்லுக்கு மட்டுமே அங்கு இடம் என்பதில்லை; சோழனது புலியும், பாண்டியனது கயலும் அதன் அகன்ற நெற்றியில் வெற்றியின் இலச்சினைகளாக உள்ளன! இமயமலை

> "முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ
> வடபே ரிமய மலை" (வாழ்த்து)

என்ற உலகறிந்த உண்மையை நூலறி புலவர்கள் அறிந்திரார் எனக் கொள்வது எங்ஙனம் ஒவ்வும்?

செங்குட்டுவன் செய்த முடிவு

நூலறி புலவோர் பொதியிலையும் இமயத்தையும் செங்குட்டுவன் முன்னர் சமநோக்கோடு வைத்து முடிவு செய்யும் பொறுப்பை அவ்விடமே விட்டுவிட்டனர். செங்குட்டுவனே கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றை அடியிலிருந்து முடிவுவரை கேட்டறிந்தவன். பொதி

யிலில் கல்லெடுக்கப் பாண்டியனோடு போர்தொடுப்பதையோ, காவிரியில் நீராட்டச் சோழனோடு போர்தொடுப்பதையோ அவன் உள்ளம் ஏற்கவில்லை. இமயப் பண்பாட்டின் மோதலால் பூம்புகாரில் எழுந்த குழப்பமே கண்ணகியின் வாழ்க்கைச் சிதைவிற்குப் பெரிதும் காரணமாகியது என்ற உண்மை அவன் உள்ளத்தில் பதிந்திருந்தது. இமயத்தைத் தலைவணங்கச்செய்து கல்பெறுவது ஒன்றே பொதியிற் செல்வியாம் கண்ணகிக்குச் சிறப்பு செய்வதாகும் என்ற முடிவைச் செங்குட்டுவன் மேற்கொண்டான். எனவே, கண்ணகியின் பெயரால் தமிழகத்தினுள்ளேயே ஒரு போரை உருவாக்கித் தன் வீரத்தைப் பழுதுபடுத்திக்கொள்ள விரும்பாத செங்குட்டுவன்,

"பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்றுறைப் படுத்தல்
மறத்தகை நெடுவா ளெங்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வருஉஞ் செய்கையோ வன்று"

(காட்சி 122—25)

எனத் திட்டவட்டமாக அறிவித்ததோடு, இமயத்தை அரசனாக உருவகித்து

"... ... ... பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவு ளெழுதவோ கற்று ராளெனின்
... ...
வாய்வாள் மலைந்த வஞ்சிசூடுதும்" (காட்சி 128—149)

என்று போர் முரசு கொட்டுகிறான்.

வில்லவன்கோதை விரும்பவில்லை?

செங்குட்டுவன் முன்னாள் நிகழ்த்திய வீரச்செயல்கள் யாவும் வில்லவன் கோதையின் 'கட்புலம் பிரியாது' காட்சிதந்தபடி இருந்தன. செங்குட்டுவன் முந்திய நாளில் கொண்ட செருவெங்கோலத்தைக் 'கண்விழித்துக்கண்டது கடுங்கண் கூற்றம்' என்ற உண்மையையும் அவன் மறந்து விடவில்லை. எனவே இன்று செங்குட்டுவன் போர்க்கோலங்கொண்டு இமயம் நோக்கி நிற்பதால் ஏற்பட இருக்கின்ற விளைவு அவனுக்குத் தெளிவாகத் தெரிகிறது. செங்குட்டுவனின் பகைமையை ஏற்கும் அளவிற்கு வீரம் படைத்த மன்னர் கடல் சூழ்ந்த இவ்வுலகில் எவர் இருக்கிறார்? செங்குட்டுவனது இந்தச் செருவெங்கோலம் இமிழ்கடல் வேலியைத் தமிழ் நாடாக்கப்போவது ஒருதலை! இக்கருத்தையே, வில்லவன் கோதை

"இமிழ்கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீ ருலகின் முழுவது மில்லை" (காட்சி 165—67)

என்று கூறுகிறான். இருந்தாலும், இவ்வடிகளுக்கு ? இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடாக்க நீமேற்கொள்ளும் இச்செய்கையை

உலகில் ஒருவரும் ஆதரிக்கமாட்டார்' என்று பொருள்கூறிச் 'செங்குட்டுவன் செய்யத்தகாத செயலைச் செய்யத்துணிந்து விட்டதால் வில்லவன் கோதைக்கு இமயப்படையெடுப்பில் ஆர்வமில்லை' என்று பேசுவோரும் உளர்! அவர் பற்றி நாம் என்ன சொல்ல இருக்கிறது?

அழும்பில்வேள் அறிவில்வேள்!

செங்குட்டுவன் இமயத்திற்கேகும் செய்தியை வடபுலமன்னர்க்ள் அறிந்தால் தானே அவர்கள் செங்குட்டுவனைப் பணிவதற்கோ, அல்லது எதிர்ப்பதற்கோ ஆயத்தமாக முடியும்? எனவே வில்லவன் கோதை

> "வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
> தென்றமிழ் நன்னாட்டுச் செழுவிற் கயற்புலி
> மண்டலை யேற்ற வரைக வீங்கென" (காட்சி 170—73)

இமயமன்னர்க்குக் கடிதம் எழுதும்படி கூறினன். ஆனால், அருகிலிருந்த அழும்பில்வேள் அதனினும் சிறந்ததொரு வழி முறையைத் தெரிவித்தான். கடிதத்தில் என்ன எழுதமுடியும்? கண்ணகிக் கடவுளுக்குக் கல்லெடுக்க நான் இமயம் செல்கிறேன்; வடபுல மன்னர்களே எனக்குத் திறை செலுத்திப் பணியுங்கள்; அல்லது என்னோடு போரிட ஆயத்தமாகுங்கள்" என்ற செய்தி தானே கடிதத்தில் இடம்பெற முடியும். இந்தக் கடிதங்களை யார் கொண்டுபோய்ச் சேர்ப்பது? வஞ்சிநாட்டைச் சேர்ந்த தூதர்கள் எடுத்துச்சென்று கொடுப்பது பெருமைதரும் ஒரு செயலாக இருக்குமா? அயல்நாட்டு ஒற்றர்கள் தம் மன்னர்க்கு இனிப்பான செய்தி ஏதேனும் கிடைக்காதா என்று வஞ்சிமாநகரத்தை நீங்காமல் சூழ்ந்து கிடக்கிறார்களே? அவர்களுக்கு சிறிது வேலைகொடுத்தால் என்ன? செங்குட்டுவன் வடதிசைநோக்கிச்செல்ல இருக்கிறான் என்ற கசப்பான செய்தியை அவர்களே சுமந்து சென்று தம் மன்னரிடம் சேர்த்து அவர்தம் முகமாற்றத்தைக் கண்டுகளிக்கட்டுமே! இந்த நகைச்சுவையை விரும்பிய அழும்பில்வேள்

> "நாவலந் தண்பொழில் நண்ணார் ஒன்றுதம்
> காவல வஞ்சிக் கடைமுகம பிரியா
> வம்பனி யானை வேந்தர் ஒற்றே
> தம்செவிப் படுக்கும் தகைமைய வன்றே
> அறைபறை ... ... (காட்சி 173—77)

என்று அரசனுக்கு எடுத்து உரைத்தான். அழும்பில்வேள் முரசறையச் சொன்னது மிகவும் பொருத்தமாக இருப்பதை அரசனும், ஏனைய அமைச்சரும உணர்ந்தனர். வில்லவன் கோதை கூறியபடி வடபுல மன்னர்களுக்குக் கடிதங்கள் எழுதினாலும் வஞ்சிமாநகரில் முரசு அறைந்துதானே யாகவேண்டும்? இன்றேல், அரசன் மேற்கொண்ட வடதிசைச் செலவுபற்றி வஞ்சி மக்கள் எவ்வகையில்

தெரிந்து கொள்ளமுடியும்? அழும்பில்வேள் கூறிய முறையை மேற் கொண்டால் ஒரே கல்வில் இரண்டு கனிகளை வீழ்த்திவிடலாமன்றோ? முரசறைவதால் வஞ்சிமாநகரிலும் எழுச்சி உண்டாகிறது. பகைப் புல மன்னர்க்குச் சேரவேண்டிய செய்தியும் சென்று சேர்ந்து விடுகிறது! வஞ்சி நகரத்தின் அழகிய தெருக்களிலே

"விற்றலைக் கொண்ட வியன்பே ரிமயத்தோர்
கற்கொண்டு பெயருமெங் காவல னாதலின்
வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடுதிறை கொடுவந் தெதிரீ ராயின்
... ...
தோட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்"(காட்சி. 182-90)

என்று முரசொலி முழங்கிற்று.

தசரதனை நினைக்க!

'இஃது செய்தியறிவிப்பாகுமா? பறையறைந்து பிற மன்ன ரனைவரையும் போருக்கன்றோ அழைத்திருக்கின்றனர்' என்று சிலர் குறை கூறுகின்றனர். இவர்களுக்கு நாம் என்ன அமைதி கூற முடியும்? 'திக்கு விசயம்' என்றால் பிற மன்னரைப் போருக்கழைத் தல் என்பது தானே பொருள்? திவர்கள் பத்துத் திசையிலும் தன் திசையிலும் தன் ரதத்தை ஓயாமல் ஓட்டிக்கொண்டிருந்த தசரதனை நினைத்து ஆறுதல் அடைவார்களாக!

இமயச் செலவு கண்ணகிக்காகவே; கனகவிசயருக்காக அன்று!

சிலப்பதிகாரத்தை முறையாகப் படிப்பவர் செங்குட்டுவன் வட திசைச் செல்ல முடிவு செய்து முரசறைவித்த பின்னரே கனகவிசயர் தமிழராற்றலை இகழ்ந்த செய்தியை இமயத்தாபதர் வந்து சொல்லக் கேட்டான் என்ற உண்மையை உணர்வர். கண்ணகிக்குக் கல் லெடுக்க இமயம் செல்ல வேண்டும் என்ற அவன் எண்ணத்தை இமயத்தாபதர் கூறிய வார்த்தை மேலும் உறுதிப்படுத்தி அவனை விரைந்தேகச் செய்தது. இவ்வுண்மையை

"..........பெரும மலையரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவுளெழுதவோர் கற்றாராஞெனின்
....
வாய்வாள் மலைந்த வஞ்சி சூடுதும்"

என்று மட்டுமே முன்னர் உரைத்த செங்குட்டுவன் பின்னர், கனக விசயம்மொழியைக் கேட்டு.

"காவா நாயிற் கனகனும் விசயனும்
அருந்தமி ழாற்றலறிந்திலராங்கெனக்
கூற்றங் கொண்டிச்சேனை செல்வது" (கால்கோள் 159-62)

என்று கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

வெஞ்சினம் விளியா வேந்தன்

செங்குட்டுவன் இமய மன்னரின் முடித்தலையில் கண்ணகிக்கான கல்லை ஏற்றி வருவேன் என்று வஞ்சினம் கூறியதைக் கேட்டு வையகமே அதிர்ந்தது, அந்தச் சமயத்தில் ஆசான் முன்வந்து "சோழரையும் பாண்டியரையும் இமய மன்னர் பழித்தனரேயன்றி உன்னைப் பழிக்கவில்லை; சீற்றம் தணிவாயாக" என்று கூறினான். ஆனால், ஆசானின் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையில் செங்குட்டுவன் இல்லை. எனவே, அவன் சினம் தணியவுமில்லை! மறைவழி பயின்ற மக்கள் சிலர் முன்போந்து புகையுடன் கூடிய வேள்வி யாவுதியைச் செங்குட்டுவன் முன் நீட்டினர்! ஆவுதிப் புகை அவன் மாலையின் பொலிவை மாற்றியது; ஆனால், சினத்தை மாற்றவில்லை! உண்மை இவ்வாறிருக்கச் சிலர் கூற்றங்கொண்டிச் சேனை செல்வது என்பதைச் 'சீற்றங் கொண்டிச்சேனை செல்வது' என்று கொண்டு ஆசான் அறிவுரைக்கிணங்கச் செங்குட்டுவன் மனம் மாறித் தன் சீற்றத்தைச் சேனைமேலேற்றிக் கூறினான் என்று கூறுவர். இது பொருந்தாக் கூற்றாகும். செங்குட்டுவன் வஞ்சினம் முடிக்கும் முன்பு சினந்தணிந்துவிட்டான் என்றால், அது

> "வஞ்சினம் வாய்த்த பின னல்லதை யாவதும்
> வெஞ்சினம் விளியார் வேந்தர்" (நடுகல். 214–15)

என்று அடிகளார் பாராட்டும் இறையிலக்கணத்துடன் மாறுபட்டுப் போகும்!

கனக விசயர் பருவமுறாப் பாலகர்கள்?

ஆண்டு ஐம்பதுக்குமேல் அரசோச்சிய செங்குட்டுவன் இளைஞர்களான கனக விசயர் சொல்லைப் பொருட்படுத்திப் பகை பாராட்டியது அடாது என்று சிலர் பேசுவதையும் கேட்கிறோம்! கனக விசயர் செங்குட்டுவனைப்போல் நரைமுடி காணாதவராக இருக்கலாம். அதனால் அவர்களைப் பருவமுறாப் பாலகர் என்று எம்படிச் சொல்லி விட முடியும்? செங்குட்டுவன் கனக விசயர்பற்றித் தாழ்த்திப் பேசும் போது 'அமையா வாழ்க்கை அரசர்' என்று கூறுகிறான். அதற்கு "அற்ப ஆயுளையுடைய அரசர்" என்றுதானே பொருள் கொள்ள முடியும்? அரும்பதவுரைகாரரும் அப்பொருளிலேயே 'நிரம்பாத உயிர்வாழ்க்கை' என்று அத்தொடருக்கு விளக்கம் தந்துள்ளார். இருந்தாலும் கனக விசயரை இளங்குற்றவாளிப் பட்டியலில் சேர்த்து விட விரும்புகிறவர்கள் 'நிரம்பாத உயிர்வாழ்க்கை' என்ற அரும்பதவுரைகாரரின் விளக்கத்திற்கு 'வயது முதிராத இளைஞர்' என்று புது விளக்கந்தர முயல்கின்றனர்! இன்னும் சிலர் 'பாலகுமரன் மக்கள்' என்று தந்தையின் பெயரொடு சேர்த்து கனகவிசயர் சுட்டப்படுவதால் அவர்கள் இளைஞர்களே என வாதிடுவர். இவர்கள் 'சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன் மகளீன்ற மைந்தன் ... ... செங்குட்டுவன்' என்ற தொடரை வைத்துக் கொண்டு தாய் தந்தையருடன் சேர்ந்து சுட்டப்படுவதால் நரைமுடி

யாக்கையைக்கண்ட செங்குட்டுவனும் இளைஞன் என்று சொல்லி விடுவர் போலும்! பொதுவாக, கனகவிசயரை இளைஞராகக் காண விரும்புவோர் ஓர் உண்மையை எண்ணிப்பார்க்கத்தவறிவிடுகின்றனர்! பருவமுறாப் பாலகராகக் கனக விசயர் இருந்திருந்தால் இமயத் தாபதர் அவர்தம் பேச்சைப் பொருட்படுத்திச் சுமந்துவந்து சொல்லி யிருப்பரா? இமயத்தாபதரைச் சொல்சுமக்க வைக்கும் அளவிற்கு அவர்கள் வயதேறியவர்களாக இருந்த உண்மையே கல் சுமப்ப தற்கும் அவர்கள் உரிய வயதை எட்டியிருந்தனர் என்பதை அறிவித்து விடுகிறது!

சோழ பாண்டியரின் கூற்று

கனக விசயர் இமயத்தில் இலச்சினை பொறித்துச் சென்ற மூவேந்தரையும் சேர்த்தே இகழ்ந்தனர். ஆனால் அவருக்குப் பாடம் கற்பிக்க அந்த நேரத்தில் சோழன் கரிகாலனோ, பாண்டியன் திருமாவளவனோ இல்லை. சோழ பாண்டிய நாட்டில் பெயர் தெரியாத மன்னர்களே அரசுக் கட்டிலில் அமர்ந்திருந்தனர். எனவே, தமிழகத்தின் சார்பில் இமயமன்னரை அடக்கும் வலிவும், வாய்ப்பும் செங்குட்டுவன் ஒருவனுக்கே இருந்தது. அந்த ஏக்கத் தில் சோழ பாண்டிய மன்னர்கள் செங்குட்டுவன் பெற்ற பெரும் வெற்றியில் குறைகான முற்பட்டதை நம்மால் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது!

"கொல்லாக் கோலமொடு உயிருய்த் தோர்ரை
வெல்போர்க் கோடல் வெற்ற மன்று"

(நடுகல் 62—63)

"தவப்பெருங் கோலங் கொண்டோர் தம்மேல்
கொதியழற் சீற்றங் கொண்டோன் கொற்றம்
புதுவது ... ..." (நடுகல் 105—107)

என்ற அவர்கள் பேச்சைக் கேட்கும்போது அவர்பால் நமக்கு இரக் கமே ஏற்படுகிறது! இவர்கள் கூறும் போர் அறத்தைச் செங்குட்டு வன் அறியாதவன் அல்லன்! கங்கைக் கரையில் நடந்த போரில் இறந்தவரொழிய ஐம்பத்திரண்டு தேராளரும், கனக விசயருமே செங்குட்டுவனிடம் சிறைப்பட்டனர். இதனை,

"... ... ... கனகனும் விசயனும்
ஐம்பத்திருவர் கடுந்தேராளரொடு
செங்குட்டுவன்தன் சினவலைப்படுதலும்"

(கால்கோள் 122—24)

என்பதால் அறியலாம். ஏனையோர் அனைவரும்

"சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்
பாடுபாணியர் பல்லியத் தோளினர்"

(கால்கோள் 225—27)

என்ற நிலையில் உருமாறிக் 'கொல்லாக் கோலங்' கொண்டு

செங்குட்டுவனின் அருள் நோக்கைப்பெற்று உயிருய்ந்து போயினர்! ஆயினும்,

"வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுளெழுத வோர் கற்கொண்டல்லது
வறிதுமீளுமென் வாய்வா ளாகில்
... ...
குடிநடுக் குறூஉங் கோலே னாகென"

(கால்கோள் 13—18)

என்று அவன் கூறிய வஞ்சினத்தை நிறைவேற்றவே கனக விசயரைச் சிறைசெய்தான்! அயல் மன்னர் தமிழரது வீரத்தைப் பழித்த காலத்துச் செயல்புரிய வாய்ப்பில்லாமல், இட்டு வைத்திருந்த அரியணையில் காட்சிப்பொருளாக வீற்றிருந்த சோழ பாண்டியருக்குக் காட்சிப்பொருளாகக்கொண்டு வந்து நிறுத்தப்பட்ட கனக விசயரிடம் இரக்கம் ஏற்பட்டது! இவர்கள், தோற்ற மன்னரைத் தேர்க்காலில் கட்டி இழுத்துவந்த மாமன்னர்பற்றிப் பேசும் 'வீரக்' கதைகளையெல்லாம் அறிந்திலர் போலும்! அறிந்திருந்தால் செங்குட்டுவனது கொற்றத்தைப் 'புதுவது' என்று பேசியிருக்க மாட்டார்!

வெஞ்சினம் விடுத்த வேந்தன்

வஞ்சினம் வாய்க்கப்பெற்ற செங்குட்டுவன் இறுதியில் வெஞ்சினம் போக்கினான், கங்கைக்கரையில் செய்யவேண்டியவை அனைத்தையும் அமைதியாகச் செய்துமுடித்தான் வினைமிகுதியின் காரணமாக இரவின் பிற்பகுதியில்தான் அவனால் பஞ்சணைக்குச் செல்ல முடிந்தது. அணையில் பொருந்திக் கண்ணை மூடுவதற்குள் கீழ்த் திசையில் ஞாயிறு எழுந்துவிட்டது! இச்செய்தியை அடிகளார்

'அரியிற் போந்தை யருந்தமி ழாற்றல்
தெரியாது மலைந்த கனக விசயரை
இருபெரு வேந்தர்க்குக் காட்டிட ஏவித்
திருந்து துயில் கொள்ளா அளவையாங்கணும்
... ...
வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்
குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்ற"

(நீர்ப்படை 189—92)

எனக் கூறுகிறார். கதிரவன் எழுச்சிப்பற்றிப் பேசும் இந்த அடிகளுக்குக் "கனக விசயரைச் சோழ பாண்டியரிடத்து அனுப்பி, அவர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ என்ற கவலையில் செங்குட்டுவன் நல்லுறக்கம் கொள்ளாமல் கிடந்தான்" என்று பொருள் கூறுவதிலே மகிழ்ச்சி கொள்கிறவர்களும் இல்லாமலில்லை!

அஞ்சினர்க்கு அளிக்கும் அடுபோர் அண்ணல்.

வஞ்சினம் வாய்த்த வேந்தன் வெஞ்சினம் போக்கிப் பணிந்தவர்க்கு அருளிய செய்தியை அடிகளார்

"ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கி
... ...
மன்னவர்க் கேற்பன செய்க நீயென
வில்லவன் கோதையை விருப்புட னேவி"

(நடுகல் 195—202)

என்ற அடிகளால் குறித்துள்ளார். பகைத்தோரை ஒறுத்துப் பணிந்தோர்க்கு அருளுதல் செங்குட்டுவனின் தலையானதொரு பண்பு! இதனை அறிந்துள்ளதாலேயே ஆசானும் தொடக்கத்திலேயே செங்குட்டுவனை விளிக்கும்பொழுது

"அஞ்சினர்க்கு அளிக்கும் அடுபோர் அண்ணல்!"

என்று கூறுகிறான். இவ்வுண்மையறியாதாரே சோழவேந்தர் குறை கூறியதாலும், மாடலன் உலக நிலையாமை, யாக்கை நிலையாமை பற்றிப் பேசியதாலுமே செங்குட்டுவன் சினம் விடுத்துக் கனக விசயரைச் சிறைவீடுசெய்தான் என்று பேசுவர். இது பொருந்தாது. கண்ணகியின் பெயரால் நிகழும் படையெடுப்பு பொதியிலும் காவிரியும் இருக்கும் திசைநோக்கித் திரும்பக்கூடாது என்பது செங்குட்டுவன் தொடக்கத்திலேயே முடிவு செய்துவிட்டஒன்றாகும். எனவே, சோழ பாண்டியர் குறைகூறியதால் ஏற்பட்ட சினம் செங்குட்டுவன் கண்களிலே சிவப்பைத் தோற்றுவித்தாலும், அது சீரொழுகு சான்றோர் சினமாகக் கண நேரத்திற்குள் கரைந்து போயிற்று! மாடல மறையோன் நீண்டதொரு முன்னுரைக்குப் பின்னர்,

"அருமறை மருங்கின் அரசர்க் கோங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்"

(நடுகல் 177—78)

என்று தன் வேண்டுகோளைத் தெளிவித்தான். செங்குட்டுவனும்

"மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக் கொள ஏவி"

(நடுகல் 193—94)

அவன் வேண்டுகோளை நிறைவேற்றினான். உண்மை அவ்வளவே. மற்றபடி, கண்ணகியைக் கடவுள் மங்கலம் செய்வதையொட்டி நிகழ்ந்த 'சிறையோர் கோட்டம் சீத்தது முதலான அருட்செயல்கள் அனைத்தும் ' வடதிசை வணக்கிய மன்னவரேறன ' செங்குட்டுவன் தன்னியல்கேற்பத் தானே விரும்பி மேற்கொண்ட செயல்களேயாம்!

புலவர் மாலை

சித்தாந்தச் செல்வர்: அ. தா. ப. திருஞானசம்பந்தன்,

கட்டுரை.

உள்ளந் தெளிதர வூன்றிய நினைவி
லள்ளு மெண்ண மன்பிற் றோய்த்து.
தெள்ளுநற் கருத்தைத் தேவனிற் சேர்த்து,
சிந்தை செய்தே பல்காற் றெளிந்து,
முந்தை நல்வினை முன்னுறக் கூட,
எந்தை யண்ண லெழிலார் குழகன்,
நிந்தை தவிர்ந்த நீள்றிரு வடிகள்,
பற்றி யுயர்ந்தேன் ; பண்பா டதனில்,
அத்தகு நிலையோ வளியுறச் சேரவும்;
பத்தியின் வலையிற் பணியுறச் சார்ந்து,
நித்தலு மவனின் நீள்புகழ் பாடி,
வந்தித் துயர்ந்து வளருங் காலை
யெந்தனி னுளத்தி லெழிசை யண்ணலின்,
சிந்தனை றோன்ற சிறப்புறு பாநலம்,
ஈண்டென் மனத்தி லியல்பாய்ப் பிறக்கவும்,
கற்பனை நூல்கள் பற்பல கற்றே,
ஏற்புடை யெண்ண மென்னுளத் துதிக்க,
அற்பமாந் தீநிலை யகன்றது நாளில்,
இப்புவித் தணியா யியல்பொடு விளங்கும்,
தப்பறி நிலையிற் றவிர்ந்துமே வாழ்ந்த,
ஒப்புயர் புலவரின் ஒண்புகழ் நிலவிட,
செப்பரி செயல்கள் சிந்தை மேவிட,
அப்பரி சதனு, லாள்தகு வெண்ணம்,
இத்திரு நாளி லினிதே யாண்டிட,
மெய்த்திரு செயல்கள் மேன்மையிற் கூடிட,
உய்தகு சிந்தை யுயர்வுபெற் றோங்க,
இன்வள இயற்கையி னினிய தோற்றமும்,
புன்மனம் போக்கும் புகழுறு வாய்வும்,
நன்மனங் கொள்ளும் நலந்தகு செயலும்
வன்மனம் மாய வளங்கெழு தோய்வும்
சொன்னலங் கொண்ட சோர்விலாப் புலவரின்
நன்னய வியல்பும் நலங்கெழு வருளும்,
பண்ணிய புண்ணியம் பல்கித் தோன்றவும்,
உள்மனக் கருத்துக ளுந்தியே வெளிவர,
தெள்மனங் கொள்ளும தெவிட்டாச் சீரும்
தொன்மையின் விளைவாற் றோன்றி யோங்க,
திண்மையை வெறுக்கையென் றுய்ந்த புலவரின்
தீத்திறங் கால்கொளத் தீதற வெண்ணி,
தன்மனக் கோயிலை றூய்மையி லிருத்தி,
மன்புகழ் பெருமனை மனங்கொள வெண்ணி,
அன்பி னுருவா மாண்டவ னிலையை,
இன்றமிழ் போற்றும் இனியநா நிலத்தில்,

ஆன்றநற் பெருமையி லளியொடு கண்டு.
சிந்தையை யென்றும் சீர்பெறு வருளில்
நிந்தை தவிர்ந்தே நாளுந் திருத்தி,
உந்தின நினைவுக ளுவகையிற் றோன்ற,
வந்தனை செய்தே வேற்ற வுளமொடு,
இத்தமிழ் மக்க ளின்புடன் மாந்த,
சித்தந் தெளிந்தே சீருறத் தந்து,
மெத்த மகிழ்வி லார்ந்தனர் புலவர் !
புண்ணியப் பொருப்பே புலவரா மென்னின்,
எண்ணிப் போற்றலு மெழிற் செயலாகும்.
துன்னிய கேள்வியுந் தீதறு நோக்கும்,
உன்னின் றூற்கு முயர்பெறு செய்தியும்,
கன்னலின் றெளிவென கவின்சுவை யோடு,
இன்னலைப் போக்கும் இன்வளம் நிறைந்த,
மன்னனே ளாங்கு மன்பதை யோர்க்கு,
மட்டிலா மகிழ்வில் மனங்கொள வளித்து,
உட்குத லின்றி யுட்கோ ளமைய
ஊன மொன்றிலா வுத்தம நிலையிற்
றானைகள் சூழ றனியொரு பாங்கில்,
மானங் காக்கு மறக்குடிப் பண்பொடு,
வானகம் போற்றி வையகம் புகழ்ந்திடும்.
சோனமே யன்ன சொற்பெரு நூல்களைக்,
கன்றுத லளவொடு கவினொடு வீந்தோர்,
கற்ற பெரியராம் கள்ளமில் புலவோர் !
உற்ற பெருநல முவகையி லோங்க,
மற்ற நலமெல்லாம் மன்பதை சார.
பெற்ற திறனெலாம் பேணி வளர்ந்திட,
செற்றம் நீங்கிட சூச்சம் நிலைத்திட,
அற்றவ ரெனுமொழி யல்லிடம் சேர்ந்திட,
உற்றவர் தவநிலை உவகையி லாழ்ந்திட,
காற்றுதல் நிலையிற் களிபெறு விலக்கியம்,
ஆற்றலி லாத்தன ரான்றநற் புலவோர் !
அத்தகைப் புலவோர் தேர்திறங் காண
வாண்டொன் றாக லகமன மலைய,
காண்டகு சொல்சீர் கணக்கது வழியில்,
மாண்டகு செயலில் வந்தன வீங்கு !
வந்ததின் விளைவால் வற்றிடா மாலை
யொன்றதை யாய்ந்து வோங்குயர் புலவரின்,
ஒள்ளிய நோக்கும், ஒப்புயர் நினைவும்,
கள்ளமிற் சொல்லும், கவினுறு பொருளும்,
எள்ளலில் வாழ்வும், ஏற்றநற் கோலமும.
ஈங்கவை யிணைய வினிய புலவோர்க்குத்
தீங்கவை விலகிடத் தேரிய சார்பால்,
மங்கையின் மணாளன் மாண்புறு வருளால்.
சொல்லில் நலங்கெழு சொன்மணி மாலை,
இன்றணி செய்து வின்பெலாம் பெற்றேன்.

மனமும், இனமும்.

புலவர். கு. கணபதி.

உலகத்தில் தோன்றிய பல்லாயிரக்கணக்கான உயிர்களுள் மனவறிவைப் பெற்றஇனம் மனிதஇனமே தவிர மற்றைய உயிர்கள் அவ்வறிவைப் பெற்றவையல்ல. மனவறிவைப் பெற்றமையால் மாந்தரை உயர்திணையென்றும், மற்றையவற்றை அஃறிணையென்றும் தொல்காப்பியர் தம்மிலக்கணத்தில் நுட்பமாசப் பகுத்தோதினர். அதோடு உயிர்களை ஓர் அறிவு முதல் ஆறு அறிவுவரை பிரித்துக் கூறிய தன்மை அவ்வறிஞனின் நுண்ணுணர்வையும், உயிரியலைப் பற்றிய உயர்ந்த அறிவையும் தெள்ளிதின் விளக்கும.

தொட்டும், மோந்தும், உண்டும், கண்டும், கேட்டும் அறிகின்ற ஐந்தறிவோடு மனவுணர்வான் அறிகின்ற அறிவும் சேர்ந்ததே ஆருவது அறிவாகும். அஃதாவது மெய். வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்களால் அறிகின்றவற்றை நல்லதென்றும், கெட்டதென்றும், வேற்றுமையுடையதென்றும் ஓர்ந்தறியவே மனவறிவு பயன்படுகின்றது. மேற்கூறியவற்ருல் எல்லாவற்றிற்கும் நிலைக்களம் மனம் என்பதே வெள்ளிடைமலை.

மனம் என்பது தெளிந்த நீர்நிலைபோன்றது. தெளிந்த நீர்நிலையை வேண்டாத்தக்கா முறையில் கையாண்டுவரின். அந்நீர்நிலை அழுக்கு நிறைந்து கொடுநாற்றம்வீச குறைபட்டுப்போம். நன்முறையில் வைத்திருப்பின் பல்வழியில் பயன் தந்து என்றும் அழகுற விளங்குமன்ரே ? அது போன்று மனத்தை தீயவற்றில் செலுத்தின் சேறும், சகதியும் நிறைந்து தீ நாற்றம்பெற்ற குட்டையைப் போன்று பல்லோரரான் பழிக்கும் இழிவை உண்டாக்கும். ஒருவன் மனத்தை நல்வழியில் செலுத்தின் நறுமணம்வீசும் குளிர்தரு சோலையாய் எல்லோராலும் விரும்பிப் போற்ற வாழ்வுபெறுவான்.

மனத்தின் கிடைக்கையை வாயுரை (வாக்கு) வெளிப்படுத்துகின்றது. அவ்வுரைகொண்டு ஒருவரின் மனத்தை இன்னொருவர் அறிகினறனர். மனம் தூய்மை உடையதாக இருப்பின் மொழியும் தூய்மைபெறும். மனம் நல்லதையே எண்ணின் செயலும் சிறந்ததாய் விளங்கும்.

ஆரும் அறிவாகிய மனவறிவைப் பெற்றவர் மாந்தரேயாகலின், அம்மாந்தர் அவ்வறிவை ஒழுங்குடன் பயன்படுத்தத் தவறின் அவ்வாரும் அறிவைப்பெற்று பயனென்னை ?

மனமும், இனமும்:-

பாலோடு தேன்கலந்தாற் சுவைபெருகுமேயன்றிக் குன்றுமோ? பாலோடு நஞ்சுசேரின் அப்பாலும் நஞ்சாய்மாறி உண்ணுவோரையும் கொல்லுமன்ரே ? தூய்மையான மனமுடையார் நல்லோரோடு கலந்தொழுகின் மேன்மேலும் அறிவைப்பெற்று புகழ் பெறுவரென்பதைச் சொல்லவும் வேண்டுமோ ? தீயாரோடு கூட்டுறவுகொள்

ளின் நஞ்சினும் கொடியராய்மாறி பிறர்க்கும் தீங்கினையன்றோ விளைப்பர். ஆதலின் மனம் தூய்மையாக இருப்பினும் சேருமிடத்தாலே மாறுபடும் என்பது விளங்குகிறதன்றோ? நல்லினஞ் சேரின் நன்மையே! தீயினஞ்சேரின் தீமையே! உலக மறை ஓதிய தெய்வப் புலவர் திருவள்ளுவர்,

"மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து" என்ற குறளால் நல்லினத்தால் வலிமையுண்டாதலை வரையறுத்துக் கூறியருளினர்.

படித்துப் பட்டம் பெற்றவர்களிலும் சிலர் பழிசெயல் புரிந்து இழிதகைமையடைவது என்னே! வழி வழியாய் நற்குடியில் பிறந்தவர்களில் சில்லோர் ஒல்லா வழியில் ஒழுகித் தனக்கும், நன்மரபுக்கும் கறை உண்டாக்குவதின் காரணம் யாது? முன்னோர் சேர்த்த செல்வத்தை நன்னெறியில் செலுத்தி ஓம்புதலின்றி எல்லா மிழந்து கண்ணீர் கலங்கி தாங்குவார் காணாது திக்கற்றவராய் அலைவதும் ஏன்? எல்லாவற்றிற்கும் காரணம் அவர் அறிவுமாறுபட்டு தீயவழியில் சென்றதன்றோ! அவ்வறிவு மாறுவதற்கு ஏதுதான் என்னே?

தூய்மையான ஆவின்பால் கெடுவதற்கு அப்பாலோ காரணம்? அப்பால் சேர்ந்த பாத்திரத்தின் குற்றத்தாலல்லவா இனிமையான பால் திரிந்தது. வான்பொழியும் நன்னீராம் மழைநீர் நிலத்தின் ஒருபகுதியில் உப்பு நீராகவும், ஒருபகுதியில் தீஞ்சுவைத் தண்ணீராகவும் இருப்பதை நாம் அறியாததா? அதுபோல தாம் சேர்ந்த இனத்தானே அறிவு மாறுபட்டுநிற்பர். தீயாருடைய குணங்கள் அவர்களோடு சேர்வதால் பற்றிக்கொள்ளாமல் விடுமோ? 'சேருமிடமறிந்து சேர்" என்றபடி ஒழுகுதல் வேண்டாவோ?

ஒருவன் நல்லவனா? தீயவனா வென்பதையும், அவன் எப்படிப்பட்ட இயல்பு படைத்தோன் என்பதையும் அவனைக்கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டியதில்லை, அவன் எவ்வினத்தினரோடு ஒழுகுகிறானென்று கண்டாலே போதும். அவ்வினத்தின் அறிவுதான் அவனுக்குண்டென்பதை உடனறிந்து அவனை இத்தன்மையனென்று கூறிடலாம். பூவோடு சேர்ந்த நார் பூவின் மணந்தான் பெறும். பாதிரிப்பூ கலந்த நீர் அப்பாதிரிப்பூவின் மணத்தையல்லவா பெற்றுவிளங்கும். கழுநீரோடு சேர்ந்த நன்னீர், அக்கழுநீர் குணத்தைத்தான் கொள்ளும். சான்றோரோடு சேரின் சான்றாண்மையும், கீழோரோடு சேரின் கீழ்மையுந்தான் உண்டாகும்.

ஒருவருடைய அறிவும், ஆற்றலும் வெளிப்பட வேண்டுமானால் தாமாக வெளிப்படாது. சில புலமிகுந்த பெரியோர் பெயர் நமக்குத் தெரிவதில்லை, அவரின் கருத்துரைகள் உலகிற்குப் பயன்படுதல் இல்லை. அவருடைய சிந்தனா சக்திகள் அவரோடு இறந்துவிடுகின்றன. சிலர் ஒளிவிடுகின்றனர், யாவரும் விரும்பிப் போற்ற புகழ் உச்சியில் நிற்கின்றனர், காரணம் என்னை?

உயர்ந்த மாணிக்கம் குப்பையில் மறைந்து கிடப்பதால் பயனுண்டோ? அதன் உயர்ந்த ஒளி இருக்கின்ற இடத்தில் இருந்தால்

ஒளி.

சித்தாந்தச் செல்வர்: அ. தா. ப. திருஞானசம்பந்தம்.

ஒளியென்பது பல பொருளொருசொல். இச்சொல்லிற்கு பொருள் காண விழைந்துழி, பரிதி, திங்கள், நெருப்பு, புகழ், விளக்கு, மறைவிடம், பிரபை, காந்தி, விளக்கு, விண்மீன், கட்புலன், அறிவு, தலைமை, பெருமை, மதிப்பு, தோற்றம், அழகு என்ற சொற்பொருள்கள் புலனாகா நிற்கின்றன. ஒளியென்றசொல் எல்லா விலக்கியவாசிரியர்களாலும், பல்வேறு இடங்களில், பல பொருள் வேறுபாட்டுடன் ஆளப்பெறுகின்றது. சங்கவிலக்கியங்களிலேயும், சங்கஞ்சார்ந்த விலக்கியங்களிலேயும், சமயவிலக்கியங்களிலேயு மொளியென்ற சொல் பயனுறுத்தப் பெறுகின்றது. இட நோக்கையும், பெர்ருட்புலப்பாட்டையும் எண்ணியே வச்சொல் இடனேற்று வருகிறது. ஒளியென்ற சொல்லிற்கு வொருபொருட்கிளவி நிறையவுளவாகலின், இலக்கியவாசிரியன் நோக்குப்படி நுனித்தேயாய்ந்து, அவ்வவ் விடங்கட்கேற்பவமைக்கப்படும் தன்மையதாயமைவதச் சொல். ஒளியென்றசொல் சங்ககால வழக்கில் பெறுதற்கரிய பேரிடம் பெற்று விளங்கியதென்பதைத் தொல்காப்பியத்தானன்கினிதுணர்கின்றோம். தொல்காப்பியம் மொழிக்கிலக்கணமாதலின், அந்நூலின்கண், காப்பியர் ஒளியென்ற சொல்லை, அறிவு என்று போற்றுகின்றது. அறிவின்றெளிவின்றேல், மக்களினத்திற்கு எத்தகைய பாகுபாட்டுணர்வும் இன்றி, அஃறிணைப் பொருட்களின் பயனறியா நிலையாகும். பகுத்தறிவுதான் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக விளங்குந் தன்மையததனால், அவ்வறிவு குன்றிய வழி, எல்லாம் சிதைந்து மாயுந் தன்மையவை. அவ்வறிவின்றேல்

(112-ம் பக்க தொடர்ச்சி)

தானே வெளிப்படும். கடலோடே முத்து மூழ்கியிருப்பினும், காட்டோடே சந்தனமரம் வளர்ந்து நிற்பினும் அவற்றால் ஆவது என்னே! நீரினின்று முத்தை நிலத்திற்குக் கொண்டுவந்து அணியாக அணிந்தபோதும் காட்டிலுள்ள சந்தனத்தை நாட்டிற்கு எடுத்து வந்து அரைத்து, உடலின்கண் பூசியபோதுந்தானே அவற்றின் அழகு, மணமும் வெளிப்பட்டது. மேற்கூறியவற்றைக் கொண்டு வந்த வல்லோரானும், அவற்றை அணியாகவும், பொருளாகவும் அமைத்த நல்லோரானுமன்றோ, அவற்றின் பெருமை அறிந்தனம்; அதுபோல ஒருவரின் அறிவாற்றலை நல்லோர்கள் வெளிப்படுத்தினாலன்றோ அறியமுடியும். தம் அறிவாற்றல் வெளிப்பட வேண்டுமென்றால் நல்லவர்களோடு தொடர்பு கொள்ளுதல் சாலச்சிறந்ததன்றோ? ஆதலின் ஒருவருடைய அறிவாற்றல் வெளிப்பட்டுப் புகழ் பெறுவதற்கு, அவர் சேர்ந்த நல்லினந்தான் என்பதில் ஐயமுண்டோ? இக்கருத்தினை,

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் — என்ற தமிழ்மறை இனிது புலப்படுத்தா நிற்கும்;

, வாலறிவும், தோன்றுவதின்றும். அதனல், பகுத்து ..ன வழித்தாய்த் தோன்றுவதே நுண்மையாகும். இந்நுண்மை ..வைப் பேணிப்போற்றிக் கூறவரும் தொல்காப்பியர், முதுமொழி புணர்த்த வருங்காலை தெள்ளிதின் விளம்புமாற்ற லேற்கின்ருர்.

தொல்காப்பியர் முதுமொழிக்கு இலக்கணம் வகுக்கவந்தகாலை, அவர்தம் சூத்திரத்திற்கிடையில் ஒளி யென்ற சொல்லைப் பயனுறுத்துகின்ருர். (ஒளி—அறிவு)

"நுண்மையுஞ் சுருக்கமு மொளியு டைமையு
மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ
மேதுநுதலிய முதுமொழி யென்ப"

— தொல்—பொருள்—செய்யுளி—4079

(பொருள்) என்னின் முதுமொழியாமாறு வுணர்த்துதல் நுதலிற்று. நுண்மை விளங்கவுஞ், சுருக்கம் விளங்கவும், ஒளியுடைமை விளங்கவும், மென்மை விளங்கவு மென்று இன்னோரன்ன விளங்கவுந்தோன்றிக் கருதினபொருளை முடித்தற்தவரும் ஏதுவைக் குறித்தன முதுமொழியென்று சொல்லுவர் என்றவாறு. (இளம் பூரணவடிகள்)

• •

தொல்காப்பியர் காலவழக்கி லொளியென்ற சொல் பலபொருட்களுடன் விளங்குந் தன்மையதா யமைந்திருந்த போழ்திலும், அறிவென்ற பொருட்படவே இலக்கண சான்ருேர் அமைத்துள்ளார். அச்சொல் எந்நோக்குபற்றி யாளப் பெறுகின்றதோ, அப்பொருட்பட தோன்ருநிற்குந் தன்மையதாம். எல்லா பொருட்களுக்கு மேற்றவொரு சொல்லாக வொளி நிற்றலான், நூலாசிரியன் நுண்ணிய நோக்கிற்கியையவே அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அச்சொல்லிற்குச் செய்யுட்களில் பொருள்காண விழைந்துழி நோக்கின், ஆண்டு நிறைவு செய்யவெழும் பொருளே பெருமிதமும் பொருளாழமும் உடைத்தாயமையுந் தன்மையதாம். ஒளி யென்ற சொல், அதற்குரித்தான, எந்தவொரு சொற் பொருளேற்கினும், பொருளமைதியும், கருத்தாழமும், நிறைவு செய்யும் தன்மையதா மென்பதீண்டு எல்லாவற்ருனும் கொள்ளற்பாற்று. அங்ஙனம் இடநோக்கிப் பொருள் காண வருங்காலத்து, எவ்வித விடர்ப்பாடும் காணுதற்கு வழியின்ரும், அன்றியும் சொற்பொருள் தேறவரும், உரைகாரர்கள், தங்களின் அறிவின் பெருக்கத்திற்கும். அறிவின் நுணுக்கத்திற்குந் தகப்பொருள் விரித்துச் சென்றுள்ளதைப் புரிந்துகொள்ளுதல் பொருத்த முடையதாம். அங்ஙனே தெய்வப் புலவரான திருவள்ளுவர் ஒளி யென்ற சொல்லைப் பல பொருள் நோக்கோடு ஈண்டுணர்த்துவதைப் பின்வரும் திருக்குறள்களானும், கருத்துக்களானுமுணரலாம்.

ஒளி = புலன்

(சுவையும், ஒளியும், ஊறும், ஓசையும், நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகளைந்தின், கூறுபாட்டையும், ஆராய்வான் அறிவின் கண்ணதே யுலகம் என்றவாறு, (பரிமேலழகர்) ஈண்டு விதிப்பொருள் அமைந்த திருக்குறளதன்கண், ஒளி யென்ற சொல்லைக் கட்புலனுக்காக வமைத்துப் போற்றுகின்றார் தெய்வத் திருவள்ளுவர். ஒளியென்பது இவண் கருவியாகு பெயராகின்றது; கட்புலனைக் குறிக்காமல், அதைச் சார்ந்த பார்வையைக் குறித்தலான் என்க. இங்ஙனே பிற திருக்குறளுரையாசிரியர்களும் பொருள் கண்டுள்ளனர். மணக்குடவர், பரிதி, காளிங்கரனைவரும் ஒத்த பொருள் வகுத்துச் சென்றனர்.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு)' —குறள்—அறம்—27.

ஒளி = பிரகாசம்—அறிவு

('தீயின்கண்ணே பொன்னுக்கு அது சுடச் சுடத் தன்னோடு கலந்த குற்றம் நீங்கி ஒளிமிகுமாறு போலத், தவஞ்செய்ய வல்லார்க்கு அதனான் வருந்துன்பம் வருத்தத் தம்மோடு கலந்தபாவம் நீங்கி ஞானமாகும்,' (பரிமேலழகர்) சுடச் சுடரும் பொன்போலென்றாராயினும், கருத்துநோக்கி யிவ்வாறு உரைக்கப்பட்டது ஒளி போலப் பொருட்களை விளக்கலின் ஒளியென்றார். இக்குறட்குஉரை வகுக்க வந்த பிறவுரையாசிரியர்கள் விசேடணப் பொருள் யாதும் கண்டார்களில்லை

"சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு,") —குறள்—அறம்—267.

ஒளி = விளக்கு

'கொடுத்தலும், தலையளி செய்தலும், செங்கோன்மையும் குடிகளைப் பாதுகாத்தலும் என்று சொல்லப்படுகின்ற இந்நான்கினையும் உடையவன் வேந்தர்க்கெல்லாம் விளக்காம்." (மணக்குடவர்) ஒளியென்ற சொற்குப் பரிமேலழகர் விளக்கென்றும், பரிதி, இராச சூரியனென்றும், காளிங்கர் அருக்கனென்றும் பொருள் கண்டுரைத்துள்ளனர். ஈண்டு ஒளியென்பது கருவியாகு பெயராயிற்று. விளக்கங்காண்டற்கு துணை செய்யும் ஒருபொருள் அறிவாதலான், ஈண்டும் அறிவு என்றே கொள்ளப்பெறுகின்றது.

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி," குறள்—பொருள்—390.)

ஒளி—புகழ்

அரசனுக்குப் புகழ் வருவதற்கு அவன் செங்கோற்றான் காரணம்; அச் செங்கோன்மையின்றேல் புகழ் எவ்வாற்றானும் நிலைக்காது. கோனிலை சீருற்றுச் சிறக்கவேண்டுமெனின், மன்னன் மக்க

விடத்துப் பெருமையுற வேண்டும். அப்பெருமையுறுவதற்கு தீய நோக்கும் அற்றவனாக வாழவேண்டும். இன்றேல் புகழ் மன்னனை மேவாது. "அரசனுக்கு ஒளிநிலை பெறுதல் செங்கோன்மை; அஃதில்லையாயின் அரசருக்கு ஒளி நிலையாதாம் என்றவாறு. (மணக்குடவர்.)

> "மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
> மன்னுவாம் மன்னர்க் கொளி.", —குறள்-பொருள்–556.

ஒளி—ஊக்கம் :

ஒளி யென்ற சொல்லுக்குப் பெருமை என்ற வதிகாரத்தில், ஊக்கம் என்று பொருள் காண்கின்றார் பரிமேலழகர், இப் பொருளுரை யாசிரியரின் கூற்று, இலக்கிய வகராதியும் காணுதற்கியலாத வொரு பொருள் நுணுக்கத்தையே, நுண்பொருட்டெளிவென வேற்று, பொருள் உரைக்கப் புருகின்றார் பரிமேலழகர். பிறவாசிரியர்களெல்லாம், பெருமை, புகழ் என்றே ஒளிக்குப் பொருள் காணப் போந்தனர், "ஒருவனுக் கொளியாவது பிறரால் செயற்கரிய செய்வேம் என்று கருதும் ஊக்கமிகுதி; ஒருவனுக்கு அச் செயலை ஒழிந்து உயிர்வாழக் கடவேம் என்று கருதுதல்." (பரிமேலழகர்)

> "ஒளி யொருவற்குள்ள வெறுக்கை இளியொருவற்(கு)
> அஃதிறந்து வாழ்வதும் எனல்." —குறள்-பொருள்-971.

ஒளி—அறிவு :

ஒளியை யறிவெனக் கொண்டு சூத்திரமியற்றினர் தொல்காப்பியர். அங்ஙனே, திருவள்ளுவரும் ஒளியென்பதை யறிவெனக் கண்டு, கொண்டு, சிறப்புப் பொருள்பட குறள் யாத்துள்ளார். 'அவையறிதல் என்ற அதிகாரத்தின்கண் 4-ம் குறட்பாவிற்குவுரை காணப் போந்த உரையாசிரியர்களனைவரும் "அறிவு' என்றே பொருள் கண்டாய்ந்துள்ளனர்.

அறிவால் ஒள்ளியராவைக்கண் தாமும் ஒள்ளியராக, ஏனை வெள்ளைகளவைக்கண்-தாமும் வாலியசுதையின் நிறத்தைக்கொள்க.' (பரிமேலழகர்) அதனால் சொற்பொருட்டெளிதல் இடனுக்கேற்ப வமையுந் தகைமைய தென்ப துணரத்தக்கது.

> "ஒளியார்முன் ஒள்ளியராதல் வெளியார்முன்
> வான்சுதை வண்ணம் கொளல்." —குறள்-பொருள் 714.

ஒளி—தோற்றம்—அறிவு

அரசர்கள்ளின் காமம் கொள்ளக் கூடாதென்பர், தெய்வத் திருவள்ளுவர் கட்காமம் அறிவினை யிழக்கச்செய்து; உடற்கட்டை

நச்சுறுத்துவதுமின்றி, தோற்றத்தில்காணும் பொலிவினையும் போக்குந்தன்மையிது அதனால் கட்காமம் பொல்லாததென்று அறிவுரை கூறலுற்றார் தேவர். ஒளி-அழகென்பார் பரிமேலழகர். ஒளி-கீர்த்தியென்பார் பரிதி. ஒளி—ஒளியென்பார் காளிங்கர். எனவே ஒளியின் பல பொருளும் அறிவின்பாற் பட்டதே யென்க. "பிறரால் மதிக்கவும் படார், தோற்றமும் இழப்பர்; எல்லா நாளும் கள்ளின்கண் காதல்கொண்டொழுகுவார். (மணக்குடவர்)

"உட்கப்படாஅர் ஒளி இழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண் டொழுகுவார்."

—குறள்—பொருள்—921

இனி, நாலடியார் பாடலொன்றில் (செய்யுள் 9-ல்) ஒளியென்ற சொல் ஆளப்பெறுகிறது இச் சொல்லுக்கு இவ் வெண்பாவில் அறிவு என்றே பொருள் கண்டுரைத்தல் சிறப்பினும், சிறப்புடைத்தாம். ஒளியென்ற சொல்லுக்குப் புகழென்றிருப்பினும், அடுத்துப் புகழ் என்று வருதலான், ஒளி அறிவெனவே கொள்ளல் பொருத்தமுடையதாகும். இவ் வெண்பாவின் பொருள் விளக்கத்தைப் பின் வருமாற்றானுணர்க.

"ஒருவன் வாய் உருசிக்கேற்ப நல்லுணவுகளை யுண்ணாமலும், பெருமைக்குரிய அறிவைத் தன்மாட்டு அமைத்துக்கொள்ளாமலும், பெயர் ஓங்கி நிற்கின்ற வளவிற்குப் புகழைச் செய்யாமலும், பெறலரிய வுறவினரது துன்பங்களைத் துடையாமலும், கைம்மாறு வேண்டாமலே, பிறர்க்கு (வறியவர்களுக்கு) தன்கைப் பொருட்களைக் கொடுத்துதவாமலும் வாழ்பவன், பொருளைக் காத்துக் கொண்டிருப்பவன், அப்பொருளை (ஆகூழால் தேடிக்குவித்த பொருளை) இழந்தானென்று தெளிந்தெண்ணப்படும். (கருத்துரை)

"உண்ணா னொளிநிரு ளோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
விழந்தானென் றெண்ணப் படும்."

—நாலடியார்—பா—9

இனிச், சங்க விலக்கியமான திருமுருகாற்றுப் படையை நோக்குழி, நக்கீரதேவ நாயனார் திருப்பரங்குன்றத்துப் பகுதியில், ஒளி

யென்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இவ்விடத்தாளப்பெறும் ஒளியென்ற சொல் தொழிலுவமம் ஏற்று வருகிறது. இப்பால் அச் சொல் பிரகாசம் (அறிவு) என்ற பொருட்படவே அமைகிறது.

" ஆண்மாக்கள் மகிழும்படி எழுந்து (மகாமேருகிரியை) பிரதிக் கணஞ்செய்யும் பல சமயத்தாரும் புகழும் சூரியன் கடலினிடத்தே காணப்பட்டாற்போல, (இருவகை இந்திரியங்களும் தாங்கள் செல்லு தற்கு உரிய பொருளிடத்தே) சென்று தங்குதலில்லையாகும்படி கண் களை மூடி (மனசினாலே) பார்க்கப்படும் (அறிவு) பிரகாசிக்கின்ற ஒளியையும்" (ஆறுமுக நாவலர் பதிப்பு)

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி."
—திருமுருகு-திருப்பரங் 1—3.

இனிச், சமயாசிரியர்களிலொருவரான, திருவாதவூரடிகளார் மூலம் ஒளி யென்பதன் பொருள் கண்டாய்வோம். உலகிலொளியாக (அறிவின் பிழம்பினனாக) விளங்குபவன் சிவபெருமான்; அவனன்றி யோரணுவுமசையாது. அவ்வொளிப் பிழம்பின்றேல், உலகத் தோற்றமுமின்றாம். ஒளியற்றால் உலகில் உயிரினங்கள் நிலைக்கா! எல்லாப் பொருள்களும் ஒளியினியைபிற் றங்கித்தான் வளர்ச்சியுறு கின்றன என்பது அறிவியலார் கண்டவுண்மை. எக்காலும் உலகில் இருள் சூழினும் உலகமக்களும், செயல்களும் நிலைக்கா! அதனாற் றான் ஒளியாந்தன்மையேற்று உயிர்களை யோம்புகின்றான் அண்ண லாம் சிவன். இவன் ஒளிமயத்தனாகவே உலக உயிர்கட்கு உய்வை யளிக்கின்றான் என்பது ஞானநூல்களான் போதருகின்றவுண்மை. சோதியாயும், சுடராயும், அவை விளங்கும் விளக்காகவும் விளங்கு பவனே சிவசத்தியும்—பராசத்தியும்.

1) "சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே,
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே!"
—திருவா—சிவபுராணம்.

2) "பார்ப்பதமண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே,"
—திருவா—கோயிற்—8.

3) "சுடற் பொற்குன்றைத் தோளா
முத்தை வாளா தொழும் புகழ்ந்து."
—திருவா—புணர்ச்சி—1.

4) "சோதியே சுடரே. சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை"
—திருவா—அருட்பத்து—1.

சோதி, ஒளி, சுடர். இம்மூன்றும் ஒரு பொருட்கிளவி. பொருள் வேறுபாடு கொள்ளாத்தன்மையன. ஒன்றில் வரும் சோதியனே என்பது கருத்தாவாகுபெயராகிறது. நான்கில் வரும் (ஒளிவிளக்கென்பது) வினைத்தொகையாகவும், தானியாகு பெயராக வும், பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாக வும் அமைகின்றது.

'சோதியே! சுடரே! அறிவுப்பிழம்பாகிய வொளியைச் சூழச் செய்கின்ற விளக்கே! சுருண்ட கூந்தலும், பெருமை மிகுந்த மார்பும் பெற்ற மடந்தையைப் பாதியாகவேற்ற பெருமனே! பால் போன்ற சுண்ணா வெண்ணீறணிந்தோய்! தாமரை மலரின்கண் பிரமனும், திருமாலும், அறியா நீதியே! செல்வம் விளங்குந் திருப் பெருந்துறையில், நிறைந்த மலர்கள் பூத்துக் குலுங்கும் குருந்த மரத்தடியை மேவிய சீர்பெற்ற ஆதியனே! அடியவனாகிய யான் உன்னை யழைத்தால், ஆதரவு தந்து அஞ்சாதே வென்றருளாய்! (கருத்துரை.)

"சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்,
பங்கயத் தயனுமா லறியா,
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்,
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே!"
திருவா—அருட்பத்து—1

தமிழுள்ளம்

ஈரோடு ஆற்றலரசு

பாடிக்கொண் டேயிருப்பேன் — உயர்
பைந்தமிழ் காட்டிடும் இலக்கியப் பாவினைப்
பாடிக்கொண் டேயிருப்பேன் (பாடி)

வள்ளுவன் குறளதில் வையமே போற்றிடும்
வளமுடை கருத்துரைகள் — அன்றித்
தெள்ளிய காப்பியம் செப்பிடும் நீதியில்
தெவிட்டாத இன்பமதாம்!
அள்ளியே பருகிட அகப்புறத் தொகுப்பினில்
ஆயிரச் சுவைநிகழ்வோ?
கிள்ளைகள் பாடியே இனிமையை மீட்டிடும்
கனித்தமிழ் சிறப்பதனைப் (பாடி)

பாடிக்கொண் டேயிருப்பேன் — உயர்
பைந்தமிழ் காட்டிடும் இலக்கியப் பாவினைப்
பாடிக்கொண் டேயிருப்பேன் (பாடி)

சித்தம் வியந்திடும் தேவாரத் திருப்பாடல்
சிலபேரை ஞானியாக்கும் — அந்தத்
தத்துவ ஞானிகள் தம்மையே ஒப்பவே
தங்களை ஆக்கிடுவார் — தினம்
இத்தரை மீதினில் யாருளார் சொல்லிடீர்?
இல்லையே என்றிடீரோ?
நித்தமும் சென்றிடு நன்னெறிப் பாதையில்
நிலையான தமிழமுதைப் (பாடி)

பாடிக்கொண் டேயிருப்பேன் — உயர்
பைந்தமிழ் காட்டிடும் இலக்கியப் பாவினைப்
பாடிக்கொண் டேயிருப்பேன். (பாடி)

" கொல்லிப்பாவை "

புலவர் தே. ப. சின்னசாமி

" பூவிற்குத் தாமரை – பொன்னிற்குச் சாம்புநதம் – பாவிற்கு வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா " - இனிமைக்குத் தமிழ் - எழிலுக்கு இயற்கை – பாவைக்குக் கொல்லிப்பாவை என வழங்குதல் நற்றமிழ் வல்லார் நன்மரபென்க!

கொல்லிப்பாவையைப்பற்றி எடுத்தியம்பாத சங்க இலக்கியங்களே இல்லை எனலாம். கொல்லிக்குடவரையில் உள்ள அந்நல்லியற்பாவையை அழகுக்கு அழகாய் விளங்கும் அரிவையர்களுக்கு உவமையாய் எடுத்தியம்பிப் போந்தனர் பைந்தமிழ்ப் புலவர்கள்.

இயல்பு :—

இது தனது அழகால் பிறரை அணங்கி வருத்தும் இயல்புடையது; கண்டோர் நெஞ்சங்கலங்கி மயங்கிவீழ்ந்து உயிர்விடச் செய்வது. இது நகைத்துத் தன்முன் வந்தாரைக் கொல்லும் என்று சித்திரமடல் செப்புகின்றது. இதனுடைய அழகுக் கவர்ச்சியில் ஈடுபட்டோர் விடுதலானு விருப்பினர்ஆகி—மீண்டவரில்லை! மாண்டவர் பலர்!!

இத்தகைய இயல்பிற்றாய கொல்லிப்பாவை உறைதலின் அம்மலைக்கும் கொல்லிமலை என்று பெயராயிற்று என்பர்.

கடவுட்பாவை :—

" பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக் கருங்கட்டெய்வம் குடவரையெழுதிய நல்லியற்பாவை " (குறுந் – 89) என்பதாலும்; கொல்லிக்குடவரைப்பூதம் புணர்த்த புதியல்பாவை விரிகதிரிளவெயில் தோன்றியன்ன " (நற்றிணை - 192) என்பதாலும் பொறையன் உரைசால் உயர்வரைக் கொல்லிக்குடவயின் — தேனுடை நெடுவரைத் தெய்வமெழுதிய பாவை " (நற்றிணை - 185) என்பதாலும்; " வல்வில்லோரி கொல்லிக்குடவரைப் பாவையின் மடவந்தனளே " (குறுந் - 100) என்பதாலும்; " கடவுள் எழுதிய பாவையின் மடவது மாண்டமாஅயோளே " (அகம் - 62) என்பதாலும்; " கொல்லிநிலைபெறு கடவுளாக்கிய பலர் புகழ்பாவையன்ன நின்னலனே " (அகம் - 209) என்பதாலும்; கொல்லிப்பாவை தெய்வத்தால் எழுதப்பட்டது என்றும், தெய்வத்தன்மை உடையதென்றும், கருங்கண்ணையுடையதென்றும், இளவெயிலைப் போல் ஒளியுடையதென்றும், வல்வில்லோரி கொல்லிமலையில் உள்ளதென்றும், கண்டார்க்கு மடப்பத்தை ஊட்டுவதென்றும், வருத்தும் இயல்பிற்று என்றும் அறியலாம்!

பாவையின் இருப்பிடம்:

இப்பாவை "பெரறையன், உரைசாலுயர்வரைக் கொல்லிக் குடவயின்" உறைகின்றது அம்மலையில் இப்பாவையின் இருப் பிடம் யாதென அறிதற்குரியது.

"கொல்லிக்குளிர் அறைப்பள்ளி" இறைவன் உறையும் இடம் என்றார் திருநாவுக்கரசர். (நாமக்கல் வளப்பூர் நாட்டு சாசனம்) அவ்விறைவன் அறப்பளீசுரர் என்று கொங்குமண்டல சதகம் கூறு கின்றது. ஈண்டு அறப்பளீசுரர் சதகம் ஒன்று உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"அறப்பளீசுரர் ஆலயத்திற்கு அண்மையில் கொல்லிப்பாவை உறையும் இடம் உள்ளதென்று கொல்லிமலை அகராதி கூறு கின்றது" (கொ. ம. ச - 23)

இப்பாவை விரிகதிரிளவெயிற்றோன்றுதலைச் (நற் - 192) சிறப் பித்தவாற்றான் இது கொல்லிக்குடவரைக்கண் மேற்குமுகமாக எழுதப் பட்டது தெரியப்படும் மலையின் மேற்குப்புறத்திலிருந்து நோக்கு வார்க்கு அது தெரியும். மாலை நேரத்தில் சூரியனது கதிரொளியில் விளக்கமாகத் தோன்றும்! அதனை இப்பொழுது தேர்க்கல் என்று சொல்லுகின்றார்கள். அந்தத் தேர்போன்ற பாறையில்தான் அப் பாவை எழுதப்பட்டுள்ளது என்கின்றனர்.

குலதெய்வம் :

இப்பொழுது கொல்லிமலையில் மக்கள் பலர் வாழ்கின்றனர். அவர்களுக்குக் கொங்கர்கள் என்று பெயர். அவர்கள் கொல்லிப் பாவையைக் குலதெய்வமாக வழிபடுகின்றார்கள். தற்போது "கொங்களாயி" என்று வழ்ங்கப்படுகிறது. இது குலதெய்வம் என்பதை, கொல்லிமலைப்பாவாய் குலதெய்வம்" (விற-தூ - 233) என்ற விறலிவிடு தூதின் அடியால் அறியலாம். தீமை செய்தவர் களைத் தவறாது தண்டித்து விடுகின்றாள் தங்கள் தெய்வம் என்கின்ற னர் அம்மலைவாழ் மக்கள்!

கதை :

இப்பாவை பற்றிக் கதையொன்று வழங்கப்படுகின்றது. கொல்லி மலையும் அதன் அடிவாரமும் செழிப்பான காடுகள் சூழப்பட் டிருந்தன. இம்மலை இயற்கை அழகின் எழில் கொஞ்சும் இடமாக விளங்கியது. அங்கு ஆண்டு முழுதும் கனிகள் கொடுக்கக்கூடிய முக்கனிகளாகிய மா, வாழை, பலா மரங்கள் மலிந்துள்ளன. ஆகவே உணவுக் கவலையே இன்றி எந்நாளும் இங்கு வாழ வாய்ப் புள்ளது.

பண்டைக்காலத்தில் கரிகாற் சோழன் ஒளிந்து வாழவேண்டிய சமயம் ஏற்பட்டபொழுது இக்கொல்லிமலைக்குத்தான் வந்தானும்! அக்காலை ஆண்டு சில சித்தர்கள் நற்றவம்புரிந்து வந்தார்கள். அச் சித்தில் வல்லவர்களை அணுகிய கரிகாலன் தன்னைக் காப்பாற்ற வேண்டினன். அவர்களும் அதற்குடன் பட்டார்கள்.

கரிகாலனைத் தேடி அவனுடைய பகைவர்களின் ஒற்றர்கள் கொல்லிமலைக்கு வந்துற்றனர். இதனை அறிந்த சித்தர்கள் ஒருவழி செய்தனர்.

ஓர் அழகான பெண்ணின் வடிவமாக ஓர் இயந்திரப் பதுமையை நிர்மாணித்தார்கள். அப்பொற்பாவைக்குள் ஒரு கூறியவாளை மறைத்துவைத்தார்கள், பதுமையைப் பார்ப்பவர்கள் அஃது உண்மையான பெண் என்றே நினைக்கும்படியிருந்தது!

அதுமட்டுமன்றி அப்பாவையின் கவர்ச்சியில் ஈர்க்கப்படுவார்கள்; அதன் அருகில் செல்வார்கள். சென்று ஆற்றுக் காதலால் அதனைத் தொடுவார்கள்! உடனே தாக்கப்பட்டு உயிர்விடுவார்கள்!!

கரிகாலனைத் தேடிவந்துற்றவர்கள்மட்டும் அதற்கு விதிவிலக்கல்லவே? அவர்கள் பதுமையைப் பார்த்ததும் அதன் எழிற்கவர்ச்சியில் மயங்கினர்! அதன் அருகில் சென்றனர். உயிருள்ள பெண்ணுகவே கருதி அதைத் தீண்டினர். உடனே அப் பதுமையினுள்ள இயந்திரம் இயங்கி அதனுள்ளிருக்கும் வாள் வெளிவந்து அவர்களைக் கொன்று குவித்தது!

இப்படியே சரிகாலனைத் தேடிவந்த ஒற்றர்கள் எல்லோரும் இறந்துவிட்டார்கள். கரிகாலன் அக்கொல்லிப் பாவையால் காப்பாற்றப்பட்டான்!

ஆகையால்தான் அப்பாவைக்குக் "கொல்லிப்பாவை" என்று பெயர்வந்தது! அப்பாவை உறையும் மலைக்கும் "கொல்லிமலை", என்று பெயர் அமைந்தது.

இந்தக் கதையை எங்களூரில் வாழ்ந்த பெரியவர் ஒருவர் கூறினர்! பேராசிரியர் கல்கி அவர்களின் "மோகினித் தீவிலும்" இக் கதைக் குறிப்பினைக் காணலாம்!

பசிப்பிணி

கோ. கோவிந்தசாமி திருமுக்கூடல்

—:o:—

பசி இவ்விரண்டெழுத்தினையுடைய சொல்லிற்குத்தான் எத்துணை வலிமை. ஞாலமே இதில் அடங்கியுள்ளது எனலாம். பசியைப் போக்குவதற்காக மாந்தர்படும் அவலநிலை அளவிடற்கரியது. இமயத்தை வெற்றிகண்ட மாந்தன் விண்வெளியைக் கண்டறிய முயலும் மாந்தன் இன்னும் கண்டறிய இயலாமலிருப்பது பசி எடுக்காமலிருக்கும் விந்தையேயாம், மாண்டவரையும் உயிர்ப்பித்து, சிறிது நேரம் பேசுவதற்கு ஆராய்ந்து வெற்றிகண்டுள்ள மாந்தன் பசிப்பிணியைப் போக்கும் வழியைக்காண இயலவில்லை.

மாந்தர் தம் பிணிகளைப் போக்கிக்கொள்ள மருத்துவர் ஒருவரை அணுகி நலம்பெற வேண்டியுள்ளது, ஆனால் பசிப்பிணியைப் போக்க மருத்துவர் ஒருவர் உளரா எனின் இல்லை. தமக்கு ஏற்பட்ட பசியைப் போக்கும் மருத்துவ்ர் யார்? தாமேதான். வேறொருவரால் அப்பிணியைப்போக்க இயலாது.

பசிவந்திடின் பத்துப் பறந்துபோம் என்பர் ஆன்றோர். அப்பத்து என்னென்ன ?

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்."

என்கிறார் ஔவைப் பெருமாட்டி.

நாள் முழுதும் விடாதுழைப்பதும், வாழ்வில் பலரைச் சந்தித்து உரையாடிப் பலதுறையிலும் முன்னேற்றம்காண முயல்வதெல்லாம் எற்றுக்கு. பசியைத் தணிப்பதற்காகத்தான்.

போற்றி போற்றியே என்று புதுச்செல்வம்
தோற்றியார் கண்ணெல்லாம் தொண்டேபோல்—ஆற்றப்
பயிற்றிப் பயிற்றிப் பலஉரைப்ப தெல்லாம்
வயிற்றுப் பெருமான் பொருட்டு.

என்கிறார் ஓர் புலவர்.

இவ்வுலகில் இரு இன்றியமையாத செயல்கள் மாந்தரிடையே நடைபெற்று வருவதைக் காணலாம். உண்பதும், உறங்குவது மாகிய செயல்கள் உயிரினங்கட்கு அவசியமாக உள்ளது. இவற்றைப் புறக்கணிக்க இயலாது. இவ்விரு செயல்களையன்றி பிறிதொன்றையும் யான் காணவில்லை என்ற கருத்தினை "உண்டுண்டுறங்குவதேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்கிறார் ஒரு பெரியார்.

பசி நீங்க உணவை உட்கொள்ளவேண்டும். அவ்வுணவை ஒரு நாள் உட்கொள்ளவேண்டிய உணவை ஒரே வேளையில் இவ்வயிறு ஏற்றுக் கொள்கிறதா எனின் . இல்லை. அன்றி இருநாள் உணவை ஒரு நாளில் ஏற்றுக்கொளகின்றதா? அதுவுமில்லை. மாந்தனுடைய துன்பத்தை அது அறிவதில்லை. ஆதலால் இவ்வயிற்றிடன் வாழ்வது மிகவும் அரிது எனக் கூறுகிறார் ஔவை.

“ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இரு நாளைக்கு ஏலென்றால் ஏலாய் - ஒருநாளும்
என்னோவு அறியாய் இடும்பைகூர் என் வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது

ஞாலத்து வாழும் மாந்தர்க்கு உணவினை நல்கியோர் உயிரை நல்கியோர் ஆவர் என்பதை,

“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே,

என நவில்கிறது மணிமேகலை.

தவத்திற் சிறந்த வலியார்க்கும் வலியாவது தமக்கு உற்ற பசியைப் பொறுத்தலாகும். அத்தகைய வலியும் பொறுத்தற்கரிய பசியினை ஒழிப்பாரின் வலிக்குப் பிற்பட்டதேயாகும் என்கிறார் வள்ளுவர் பெருந்தகை.

“ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்

வறியவரது பசியைப் போக்கும் அறத்தை ஒருவன் மேற்கொள்ளின் தாம் தேடின பொருளை வைப்பதற்குத் தக்க இடம் பெற்றவனாவான்,

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி.

தாம் ஈட்டும் பொருளைப் பகுத்துண்டு வாழும் மாந்தரைப் பசி என்னும் தீய பிணி தீண்டுதல் இல்லை, பிறரின் பசியை ஒரு பிறப்பில் போக்குதல் தம் பசியை எப்பிறப்பிலும் ஒழிக்கும் மருந்தாகும் என ஆன்றோர் மொழிவர்.

“பார்த்தூண் மரீஇ இயவனைப் பசி யென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.”

பண்டைக் காலத்தில் புலவர் ஒருவர் மன்னன் ஒருவனை வாழ்த்த முற்படும்போது மன்ன நின் நாடு பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்க என வாழ்த்துவதை சங்க இலக்கியத்தின் மூலம் அறிய இயலுகிறது.

பசியின் தன்மையை உணர்ந்து மாந்தரிடையே நிலவிய அப்பிணியைப் போக்க முயன்று நாடாளும் மன்னரும் புலவரும் பாடும்

பெருமைபெற்றவன் பண்ணன். பசிப்பிணி மருத்துவன் எனப் பெயர் பெற்றவன். "யான் வாழும் நாளும் பண்ணன் வாழ்வாளுக எனப் பாணன் ஒருவன் கூற்ருக வைத்துச் சோழ வேந்தன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் புகழ்ந்து பாடியுள்ளான் எனின் அப்பண்ணனின் பெருமையை என்னென்பது ?

மன்னர் குடியில் பிறந்தோர் தம் பசியைப் போக்கிக்கொள்வதற்காகப் பிறரிடம் இரந்து உயிர் வாழமாட்டார்கள் என்பதை" வயிற்றுத்தீத் தணியத் தாம் இரந்து உணணும் அளவை ஈன்மரோ இவ்வுலகத்தானே எனக் கூறுகிருன் சேரமான் கணைக்காலிரும் பொறை

நாடாளும் மன்னர் மட்டுமல்ல சான்ருேர் தரம் மடிய நேரினும் பசியின்பொருட்டு மானமிழக்கும் செயல்களைச் செய்யவிழையார்.

ஒழியரப்பிணியும், புறப்பகையும் மட்டுமல்ல, மிக்கபசியும் அற்ற நாட்டைத்தான் நாடு எனக் கூறுவர் ஆன்ருேர்.

" உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதியல்வது நாடு "

பசி எத்தன்மையது என்பதை நன்கு விளக்குகிறது ஏரெழுபது என்னும் நூல்.

கார் நடக்கும் படிநடக்கும் காரானர் தம்முடைய
ஏர் நடக்குமெனில் புகழ்சால் இயல்இசைநாடகம் நடக்கும்
சீர் நடக்கும் திறம் நடக்கும் திருவறத்தின் செயல் நடக்கும்
பார் நடக்கும் படை நடக்கும் பசி நடக்க மாட்டாதே

பசி என்று வருபவர்களுக்கு இல்லையென்று கூருது ஒரு பிடி உணவை அளிப்பின் அது இரக்கமற்றவரையும் இன்புறச்செய்யும் என்கிருர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

" பசி என்று வந்தால் ஒரு பிடி சோறு
புசி என்று தந்து பாரப்பா
பசையற்ற உன் நெஞ்சில் இன்பம் உண்டாகும்
பாருக் குழைப்பதே மேலான யோகம் "

மாந்தர் ஒவ்வொருவருடைய பசியைப் போக்குவதற்கும் தேவையானது நாழி அரிசியே யாகும் இதைப் பெறுவதற்காக அம் மாந்தர் செய்யும் செயல்களை நன்கு எடுத்தியம்புகிறது நல்வழி;

" சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர் கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழினுடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம் "

இதன் மூலம் மாந்தரைப் பற்றியுள்ள பசிப்பிணியின் தன்மையை உணரலாம்.

சிலப்பதிகாரம் காவியமா?

சாலை, இளந்திரையன்

—:o X o:—

தில்லித் தமிழ்ச் சங்க ஆராய்ச்சி அரங்கத்தின் 1965-66 கூட்டத் தொடரில் இரண்டாவது கூட்டம் 19—9—65ல் நடைபெற்றது. லேடி ஸ்ரீராம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை குமாரி இந்திராணி, "சிலப்பதிகாரம் காவியமா?" என்னும் தமது ஆராய்ச்சி உரையை நிகழ்த்தினார் ;

"செய்யுள் நூல்களைத் தன்னுணர்ச்சிப் பாடல், நாடகம், காவியம் என்று மூன்று வகையாகப் பிரித்திருக்கிறார்கள் இவற்றுள் "லிரிக் பொயட்ரி" என்னும் தன்னுணர்ச்சிப் பாடல் ஒரே உணர்ச்சியை வெளியிடும் சிறிய பாடல்; நாடகம் உரையாடல்களாகவே அமைவது. நாடகத்தில் ஆசிரியர் கூற்றாக வரும் வருணனைகளுக்கு இடமில்லை. சிலப்பதிகாரம் ஒரே உணர்ச்சியை மட்டும் வெளியிடும் சிறுபாடல் அல்ல; நாடக இலக்கணங்களுக்கு முழுவதும் பொருந்தி வரும் இலக்கியமும் அல்ல, எனவே மூன்றாவதான காவிய இலக்கணங்களுக்குப் பொருந்தி வருகிறதா என்று பார்க்க வேண்டும்

"பிற்காலத் தமிழ்க் காவிய இலக்கணங்களின் படி, தன்னிகரில்லாத தலைவனை உடையதாகவும், அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையும திறம்பட விளக்குவதாகவும், அரசியல் சம்பந்தமான நிகழ்ச்சிகளும் போராட்டங்களும் அமைந்ததாகவும், பல்வேறு சுவைகளும் நிரம்பியதாகவும் உள்ளது காவியம். மேலைநாட்டினர் வீரகாவியம், காதல் காவியம் போன்ற பல பிரிவுகளை இதிலே வகுத்துள்ளார்கள்.

"இந்த இலக்கணங்களை அப்படியே பொருத்திப் பார்க்க முடியாவிட்டாலும், பொதுவாகக் காவியங்களுக்குக் கூறப்படும் முக்கிய இயல்புகளைக் கொண்டே விளக்குகிறது சிலப்பதிகாரம். பெரும்பாலும் நல்ல இயல்புகளே உடைய கண்ணகி, கோவலன், மாதவி, பாண்டியன், சேரன் செங்குட்டுவன் முதலிய பாத்திரங்களையும், நகை, அழுகை, உவகை, வெகுளி, பெருமிதம் இளிவரல் முதலிய சுவைகளையும் கொண்டு அக்காலச் சமுதாயத்தைத் திறம்படச் சித்திரிக்கிறது சிலப்பதிகாரம் முக்கியப் பாத்திரமாகிய கண்ணகி சாதாரண மனிதநிலையிலிருந்து அதிமனித நிலைக்கு உயரும் வளர்ச்சி நிலையைக் காட்டுவதாக இதன் கதை அமைப்பு உள்ளது. இவை யாவற்றுக்கும் மேலாக ஊழ்வினை என்னும் பொது உண்மையையும் விளக்குகிறது சிலப்பதிகாரம. ஆகவே இதை ஒரு சிறந்த காவியமென்றே சொல்ல வேண்டும்."

இவ்வாறு இந்திராணி தமது உரையை நிகழ்த்தி முடித்ததைத் தொடர்ந்து திருவாளர்கள் பாலசுப்பிரமணியன். சுப்பிரமணியன், சாலை. இளந்திரையன், ஆறுமுகம், கனகசவுந்தரி இளந்திரையன் ஆகியோர் கருத்துத் தெரிவித்தார்கள். அவர்கள் கூறியவற்றின் சுருக்கம் வருமாறு :

"சிலப்பதிகாரத்தின் இறுதியில் அமைந்துள்ள நூற்கட்டுரையில், 'மணிமேகலை மேல் உறைப்பொருள் முற்றிய சிலப்பதிகாரம்' என்னும் குறிப்பு உள்ளது. பிற்காலத்தாரும், கதைத்தொடர்பு காரணமாகவோ என்னவோ, சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் 'இரட்டைக் காப்பியங்கள்' என்று வழங்கி வந்துள்ளார்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கில் சிலப்பதிகாரம் வீடு பேறு பற்றிக் கூறவில்லை என்போரும் உண்டு. கண்ணகியும் கோவலனும் வீடு பேறு எய்துவது பற்றிய செய்தி மணிமேகலையில் (காதைகள் 26, 28) கூறப்பட்டுள்ளது. இந்தக் காரணங்களால், அக்காலத்தார், இரண்டும் சேர்ந்தே ஒரு காவியம் என்று எண்ணியிருந்தனர் என்பது தெளிவு

"ஆனால், நூலின் பயனைப் பற்றிக் கூறும் இலக்கணம், அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே' என்கிறது. இங்கே, இப்பயனை அடைவோர் இலக்கிய மாந்தர்கள் அல்ல; இலக்கியம் படிப்போருக்கு இந்தப் பயன்கள் ஏற்படும் வண்ணம் இலக்கியம் அமைய வேண்டும் என்பதே இதன் கருத்து. இதன்படிப் பார்த்தால், படிப்போர் எல்லாவித உயர்வுகளையும் அடைவதற்கான கருத்துக்கள் அனைத்தையும் சிலப்பதிகாரத்திலேயே காண முடிகிறது. 'சிந்தை செல்லா சேண்நெடுந் தூரத்து அந்தமில் இன்பம்' ஆகிய வீடுபேறு நூல்களில் குறிப்பாக மட்டுமே உரைக்கப்படும் என்ற கொள்கையும் உண்டு. ஆகையால், பிற்கால இலக்கணத்தின்படிப் பார்த்தாலும் சிலப்பதிகாரம் முழுமையான காப்பியமே.

ஆயினும், காவியங்களில் பொதுவான பெருஞ்செய்தி ஒன்று வேண்டும். அது ஓர் இனத்துக்கோ மனிதக் குலத்துக்கோ பொதுவானதாக இருக்கவேண்டும். இப்படிச் செய்திகள் சிலப்பதிகாரத்தில் இரண்டு உள்ளன. ஒன்று ஊழ்; மற்றது தமிழாற்றல், அதாவது தமிழ் இனப் பெருமை. முதல் இரண்டு காவியங்களை ஊழ்வினை ஆட்சி செய்ய வடவர்க்கு எதிராகத் தமிழ் இனப் பெருமையை நிலை நாட்டிய 'தமிழாற்றல்' மூன்றாவது காண்டத்தில் மட்டுமே வருகிறது. இதனாலேயே சில அறிஞர்கள் வஞ்சிக்காண்டம் இளங்கோ அடிகள் எழுதியதன்று என்கிறார்கள். ஆனால் சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முதல் காவிய இலக்கியம் என்பதையும் அதற்கு முன் மாதிரியாக எதுவும் இல்லை என்பதையும் நாம் உணரவேண்டும். "எந்தத் துறையிலுமே முதல் முயற்சிகள் குறை உடையனவாகவே இருப்பது தவிர்க்க முடியாதது" என்பதும் நினைக்கத்தக்கது. தமிழ்க் காவிய உலகின் முதல் முயற்சியாகிய சிலப்பதிகாரம் இத்தகைய குறைபாடுகள் உடையதாயினும், அது, வெற்றி பெற்ற முதல் முயற்சி என்பதில் ஐயமில்லை."

ஆராய்ச்சி அரங்கத்தில் அடுத்த கூட்டத்தை 17—10—65ல் நடத்துவது என்றும், அதில், மதராசிப் பள்ளித் தமிழாசிரியர் திரு. எஸ் சுப்பிரமணியம், "சங்க இலக்கியமும் சிலப்பதிகாரமும்" என்ற தலைப்பில் ஆராய்ச்சி உரை நிகழ்த்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.